# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1997 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம்

---

(1997, ஓகத்து மாதம் 21 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1997, ஓகத்து மாதம் 22 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 5.25 தபாற் செலவு: ரூபா 2.50

## *1997 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம்*

[1997 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஓ. 25/96
4332

## *இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

*1.* இச்சட்டம் 1997 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

*2.* (1) (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *165 ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) ' "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ' "வங்கி" எனக் குறிப்பீடு செய்யப்படும்' என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை நீக்கஞ் செய்துவிட்டு அதற்குப் பதிலாக, பின்வரும் பந்தியை இடுவதன் மூலமும் :—

"(ஆ) இ. அ. நி. கூ. வங்கி என அழைக்கப்படுதல் வேண்டும்.".

*3.* (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் (விரிவுப் பெயரில் தவிர) எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்திலும் "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" அத்துடன் (இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தைக் குறிக்கும்) "கூட்டுத்தாபனம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, முறையே "இ. அ. நி. கூ. வங்கி" அத்துடன் "வங்கி" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும். "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" என்பதும் "கூட்டுத்தாபனம்" என்பதும் முறையே "இ. அ. நி. கூ. வங்கி" எனவும் "வங்கி" எனவும் குறிப்பீடு செய்யப் படும்.

1—ம 044997—1,100 (97/06)

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தகவல் தொடர்பில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்தில் "இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்" என்பது பற்றிய குறிப்பீடு ஒவ்வொன்றும் "இ. அ. நி. கூ. வங்கி" என்பதைப் பற்றிய குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தனியார் கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளை" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளை" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "தனியார் மூலதனத்தின்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "மூலதனத்தின்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கஞ்செய்வதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் (vii) ஆம் பந்தியின், "தனியார் கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கும் அல்லது அவற்றிற்காகவும்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "கைத்தொழில், கமத்தொழில் அத்துடன் வர்த்தகத் தொழில் முயற்சிகளுக்கும் அல்லது அவற்றிற்காகவும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

6. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றி மூன்றாம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "இவ்வுட்பிரிவின்கீழ், உத்தரவாதமளிக்கப்பட்ட எல்லாக் கடன்களினதும் கூட்டுத் தொகை முன்னூறு கோடி ரூபாவை விஞ்சுமாயின், இவ்வுட்பிரிவின்கீழ் உத்தரவாதமெதுவும் கொடுக்கப்படலாகாது." என்ற சொற்களை நீக்கிவிடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

7. (1) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று வலுவிலிருக்கும் இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அத்துடன் வேறு சாதனங்கள் அனைத்தும் இ. அ. நி. கூ. வங்கியால் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களாக, உடன்படிக்கைகளாக அல்லது வேறு சாதனங்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

பேணல்கள்.

(2) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்டவையும் இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவுறாதிருக்கின்றவையுமான எல்லாத் துடர்ச்சிகளும், வழக்குகளும் வேறு சட்ட நடவடிக்கைகளும் இ. அ. நி. கூ. வங்கியால் அல்லது அதற்கெதிராகத் தொடரப்பட்ட துடர்ச்சிகளாகவும் வழக்குகளாகவும் வேறு சட்ட நடவடிக்கைகளாகவும் கருதப்பட வேண்டும்.

(3) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் எல்லா உரிமைகளும், பொறுப்புகளும், கடப்பாடுகளும் இ.அ.நி. கூ. வங்கியின் உரிமைகளாகவும், பொறுப்புகளாகவும், கடப்பாடுகளாகவும் கருதப்படுதல் வேண்டும்.

(4) ஏதேனும் வழக்கில் அல்லது நடவடிக்கையில் ஏதேனும் நீதிமன்றத்தால், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியப்பட்ட தீர்வை, கட்டளை அல்லது தீர்ப்பு ஒவ்வொன்றும் இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து இ. அ. நி. கூ. வங்கிக்குச் சாதகமாக அல்லது அதற்கெதிராகப் பதியபபட்ட ஒரு தீர்வையாக, கட்டளையாக அல்லது தீர்ப்பாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன் அதற்கிணங்க வலுவுக்கிடவும்படலாம்.

8. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.